2008-2009

5 உறைகள்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம் 7 OCT 2008 சென்னை 600 005.

சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்–கல்வி–விடுதிகள் – 2008–09 ஆம் ஆண்டு–இஸ்லாமிய சிறுபான்மையின மாணவியருக்கு 5 புதிய பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் துவங்குதல்– ஆணைகள்–வெளியிடப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிறு ஆ1)த் துறை

அரசாணை(நிலை)எண். 101

நாள் 30.9.2008

திருவள்ளுவர் ஆண்டு 2039

புரட்டாசி 14

படிக்கப்பட்டது:

சிறுபான்மையினர் நல ஆணையரின் கடிதம் எண். TM 5/414/08, நாள் 26.5.2008.

ஆணை:–

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் மாநிலம் முழுவதும் தற்போது 1181 மாணவ / மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. 2008–09 ஆம் ஆண்டு புதிய அறிவிப்புகளின் கீழ் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் இஸ்லாமிய மாணவிகளுக்கென 5 புதிய விடுதிகள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மானிய கோரிக்கையின் போது அறிவித்தார்கள். இது தொடர்பாக இயக்குநர், சிறுபான்மையினர் நலன் அவர்களின் அறிக்கை கோரப்பட்டது. அதன்படி 2008–09 ஆம் ஆண்டில் இஸ்லாமிய சிறுபான்மையின மாணவியர்களுக்கு 5 புதிய பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளை துவக்குவதற்கான செயற்குறிப்பினை சிறுபான்மையினர் நல ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. சிறுபான்மையினர் நல ஆணையரின் செயற்குறிப்பு அரசால் விரிவாக பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

1. 2008–09 ஆம் ஆண்டில் இஸ்லாமிய சிறுபான்மையின பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் தங்கி கல்வி பயில ஏதுவாக திருநெல்வேலி, திண்டுக்கல், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய 5 இடங்களில் புதிய விடுதிகள் துவங்கிட அரசு ஆணையிடுகிறது.

2. இந்த 5 புதிய விடுதிகள் முதலில் வாடகைக் கட்டிடத்தில் துவங்கிட அரசு அனுமதி வழங்கப்படுகிறது.

3. ஒவ்வொரு விடுதியிலும் 50 மாணவிகள் (25 பள்ளி மாணவியர்கள் மற்றும் 25 கல்லூரி மாணவியர்கள்) சேர்க்கப்படுவர்.

ஆரம்ப கட்டத்தில் இஸ்லாமிய மாணவியர்கள் எண்ணிக்கை குறைவாக இருக்குமேயானால் ஒரு சில விழுக்காடுகள் முஸ்லீம் அல்லாத மாணவியர்கள் சேர்க்க அனுமதிக்கப்படுகிறது.

3. புதியதாக துவங்கப்படும் 5 விடுதிகளுக்கும் கீழ்க்கண்டவாறு புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அவை நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக ஏற்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

| வரிசை எண். | பணியிடம் விவரம் | அனுமதிக்கப்படும் எண்ணிக்கை | சம்பள விகிதம் (ரூ.) |
|---|---|---|---|
| 1. | பட்டதாரி காப்பாளினி | 5 | 5500-175-9000 |
| 2. | சமையலர் | 5 | 2550-55-2660-60-3200 |
| 3. | காவலர்/ஏவலர் | 5 | 2550-55-2660-60-3200 |

மேலே பத்தி 2–ல் புதியதாக துவங்கிட அனுமதிக்கப்பட்டுள்ள 5 விடுதிகளுக்கு 2008–09 ஆம் ஆண்டில் தொடர் செலவினமாக ரூ.26, 37,180/–(ரூபாய் இருபத்தாறு இலட்சத்து முப்பத்தி ஏழாயிரத்து நூற்றி எண்பது மட்டும்) மற்றும் தொடரா செலவினமாக ரூ.8,81,000/– (ரூபாய் எட்டு இலட்சத்து எண்பத்து ஓராயிரம் மட்டும்) ஒப்புதல் அளித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்– LA சிறுபான்மையினர் மாணாக்கர் இல்லம்.

| செலவின விவரம் | தொடர் செலவினம் (ரூ.) | தொடரா செலவினம் (ரூ.) |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>தகவல் தொகுப்பு குறியீடு 2225 03 277 LA 0104 | 11,37,780 | – |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறைகலன்கள்<br>தகவல் தொகுப்பு குறியீடு 2225 03 277 LA 0551 | | 1,50,000 |
| 6 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>தகவல் தொகுப்பு குறியீடு 2225 03 277 LA 0613 | 2,70,000 | |
| 24 பொருட்களும் வழங்கலும்<br>தகவல் தொகுப்பு குறியீடு 2225 03 277 LA 2406 | | 5,31,000 |
| 34 ஏனைய செலவுகள்<br>02 நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>தகவல் தொகுப்பு குறியீடு 2225 03 277 LA 3423 | – | 2,00,000 |
| 67 உணவு அளிக்கும் செலவுகள்<br>09 ஏனையவை<br>தகவல் தொகுப்பு குறியீடு 2225 03 277 LA 6797 | 11,49,750 | |
| 99 பல்வகை செலவுகள்<br>தகவல் தொகுப்பு குறியீடு 2225 03 277 LA 9909 | 79,650 | |
| | 26,37,180 | 8,81,000 |

தொடரா செலவினத்தின் கீழ் ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரி விடுதிக்கு கண்டுள்ளவாறு செலவினம் அனுமதிக்கப்படுகின்றது.

| வரிசை எண். | செலவினம் | அனுமதிக்கப்படும் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | எரிவாயு இணைப்பு | 30,000 |
| 2. | நூலக வசதி | 30,000 |
| 3. | பாத்திரங்கள் | 30,000 |
| 4. | மரச்சாமான்கள் | 30,000 |
| 5. | இன்வர்ட்டர் | 15,000 |
| 6. | பாடக் குறிப்பு புத்தகம் | 10,000 |
| 7. | அரவை இயந்திரம் | 8,000 |

| | | |
|---|---|---|
| 8. | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | 11,000 |
| 9. | விளையாட்டுக் கருவிகள் | 5,000 |
| 10. | பாய் 50 எண்ணிக்கைX ரூ.44 | 2,200 |
| 11. | பெட்ஷீட் (50 எண்ணிக்கைX ரூ.100) | 5,000 |

5. மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பிற்கு இயக்குநர், சிறுபான்மையினர் நலம் அவர்கள் மதிப்பீட்டு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார். கணக்குகளில் மேற்சொன்ன புதிய கணக்கு தலைப்பினைத் தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. இது ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். உரிய காலத்தில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு I ) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் நிதி (வரவு–செலவு I ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண். 59141/நிதி (பி.ஜி.பி)/08, நாள் 23.9.2008 மற்றும் அ.சா.எண். 61147/நிதி (சி.எம்.பிசி), நாள் 26.9.2008–ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.903 (தொள்ளாயிரத்து மூன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

ந. வாசுதேவன்,
அரசு செயலர்.

பெறுநர்
சிறுபான்மையினர் நல ஆணையர்,
சென்னை–2.
பிற்படுத்தப்பட்டோர் நலஆணையர்,
சென்னை–5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நல ஆணையர்,
சென்னை–5.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி, திண்டுக்கல், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர்.
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்,
திருநெல்வேலி, திண்டுக்கல், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர்.
மாநில கணக்காயர், சென்னை–18/(பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை 1), சென்னை–18/(பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை 2), சென்னை–6/(பெயரில்)

மாவட்ட கருவூல அலுவலர்,
திருநெல்வேலி, திண்டுக்கல், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர்.

நகல்
நிதித் (பி. மிபி/வ.செ.பொ.I /வ.செ.பொ.II(CMPC)துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (பிந) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் (பிந 3) நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
30/9/08